| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 18/05/2022 | முதல் | 22/05/2022 |
| | அறிக்கை எண் : | 039/ 2022 | வெளியீட்டு நாள் : | 17/05/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.05.2022 முதல் 16.05.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 22-05-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/05 | 14/05 | 15/05 | 16/05 | தேதி | நாள்-2 18/05 | நாள்-2 19/05 | நாள்-3 20/05 | நாள்-4 21/05 | நாள்-5 22/05 |
| 0.0 | 0.0 | 3.5 | 0.5 | மழை (மி.மீ) | 30 | 12 | 4 | 6 | 8 |
| 39 | 40 | 39 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 30 | 31 | 33 | 33 |
| 26 | 27 | 26 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 23 | 23 | 24 | 24 |
| 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 5 | 5 |
| 56 | 55 | 67 | 86 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| 39 | 86 | 47 | 57 | | 60 | 60 | 60 | 60 | 60 |
| 11 | 7 | 9 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| வட மேற்கு | மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | **காற்றின் திசை** | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 30°- 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° - 24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**அடுத்து வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (20- 26 மே 2022) :**

மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட சிறிதளவு கூடுதலாக அளவு மழைப் பொழிவு காணப்படும்.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை விட குறைவாக காணப்படும். 26° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பாக காணப்படும். 20° செல்சியஸ் முதல் 26° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 18.05.2022 முதல் 22.05.2022 தேதி வரை தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும். கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம். இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும்.

**கனமழை எச்சரிக்கை:**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 18 மற்றும் 19 ம் தேதிகளில் இடிமின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் , இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கும் படியும், விளை நிலங்களில் மழை நீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

.

ஆங்காங்கே சிறிதளவு மழை பெறப்பட்டுள்ளதால் தற்போதைய சூழ்நிலையில் மானாவாரி நிலத்திற்கு மட்டுமல்லாமல், நஞ்சை நிலத்திலும் கோடை உழவு செய்வது மிகவும் அவசியமாகும். உழவு செய்த நிலத்தில். மண்வெடிப்பு உண்டாவதில்லை. இதனால், பெய்யும் மழைநீர் நிலைநிறுத்தப்பட்டு சேமிக்கப்படுகிறது. மேலும் மண்ணில் உள்ள கூட்டுப்புழுக்கள் மற்றும் பூஞ்சாணங்கள் மண்ணின் மேற்புறம் கொண்டுவரப்பட்டு சூரியகதிர்கள் மற்றும் பறவைகள் மூலமாக அழிக்கப்படுகின்றன.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : கரும்பு, கம்பு, கால்நடை.

**கரும்பு:**

- கரும்பு பயிரில் போக்கிடங்களை நிரப்புதல் முக்கியமாகும்.
- நடவு செய்த 30 நாட்களுக்குள் முளைத்த இரண்டு பதியம் கரணைகளையோ அல்லது 15-20 நாட்களான பாலித்தீன் பை நாற்றுகளை கொண்டோ சந்து நிரப்பி நடவு செய்திட வேண்டும்

**கம்பு:**

- மானாவாரியில் கம்பு விதைக்க ஏற்ற தருணமாகும்.
- கோ7, கோ9, X7, ICMV 221, த.வே.ப.க கம்பு கலப்பினம் கோ 9 போன்றவை மானாவாரிக்கு ஏற்ற இரகங்களாகும்
- அனைத்து கம்பு ரகத்திற்கும் 45 X 15 செ.மீ. இடைவெளி விட்டு இரண்டு (கம்பு) வரிசைக்கு ஒரு வரிசை ஊடுபயிராக பயறுவகை பயிரையும் விதைக்க வேண்டும்.

**கால்நடை:**

- கால்நடை வளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு இந்த தருணங்களில் தங்களின் மாடுகளை கோமாரி எனும் கால்கானை வாய்க்கானை நோய் தாக்குவதற்கான வாய்ப்பு
- அரசு கால்நடை மருந்தகத்தை அணுகி தங்களது மாடுகளுக்கு கோமாரி எனப்படும் கால்கானை வாய்க்கானை நோய்க்கான தடுப்பூசியினை போட்டுக் கொள்ள வேண்டும்.